பக்கங்கள்: 12
விலை : 30/-
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை 18.10.2020 கதிர் 343

## இது ரகசியம் அல்ல!

'மலையைக் கெல்லி எல்யைப் பிடிப்பது' என்பார்கள். அப்படி ஒரு வேலையைச் செய்திருக்கின்றது தேர்தல் ஆணையம்.

புதிய தேர்தல் கட்சிகளாப் பதிவு செய்வதற்கு மொத்தம் 154 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதில் பக்கம்02

# சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் நிறுவன ரீதியாகச் செயற்பட முடிவு

### நேற்றைய நல்லூர் கூட்டத்தின் பின் மாவை தெரிவிப்பு
### தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் சேர்க்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 18

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளும் ஸ்தாபன ரீதியாகச் செயற்பட வேண்டும் என விருப்பம் வெளியிட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவ்வாறு செயற்படுவது தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம்,நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை அனைத்துத் தமிழ் தேசியக் கட்சிகளும் கூடி கலந்துரையாடினர். அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். பக்கம் 02

### 20 இற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய
## விஜயதாஸவின் பாதுகாப்பை குறைத்தது கோட்டாபய அரசு!

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்விஜயதாஸ ராஜபக்ஷவின் பாதுகாப்புத் திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு 5 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும்,தற்போது2பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் கடமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் பக்கம் 02

## வீடு புகுந்து வயோதிபரை வாளால் வெட்டிய கும்பல்
### புன்னாலைக்கட்டுவனில் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

புன்னாலைக்கட்டுவன்வடக்கு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு பக்கம் 02

## 'கொரோனா' மூன்றாவது அலை பாதிப்பு 2 ஆயிரத்தைக் கடந்தது
### இலங்கைக்குப் பெரும் சவால்

மினுவாங்கொடை கொத்தணி கொரோனா பரவல் இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலையாக உருவாகி பெரும் சவாலாக மாறிவரும் நிலையில் நேற்று 121 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பக்கம் 02

## கிளி.மாவட்ட வைத்தியர் குழுவினர் வெலிக்கந்தை, கரடியனாறு விஜயம்
### கொரோனாத் தடுப்பு வைத்தியசாலை அமைக்கும் பணி தொடர்பில் ஆராய்வு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் அமையும் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலையை அமைக்கும் பணிக்காக தற்போது கொரோனா தடுப்பு பக்கம் 02

## நோய்த் தொற்றால் உயிரிழப்பு நேரலாம்
### சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

கொரோனா தொற்றால் இலங்கையில் உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை மறுப்பதற்கில்லை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பக்கம் 02

## ஊரடங்கை மீறிய 203 பேர் கைது!
### 40 வாகனங்கள் தடுப்பு

தொற்றுநீக்கசட்ட விதிகளுக்கமைய அமுல்படுத்தப்பட்டுள்ள ஊடரங்கு சட்டத்தை மீறிய 203 சந்தேக நபர்கள் கைது பக்கம் 02

## ரிஷாத்துக்குக் கருணை காட்டவே மாட்டோம்!
### பாதுகாப்புச் செயலர் உறுதி

ரிஷாத் பதியூதீனுக்கு எந்தக் கருணையும்தாங்கள் காட்டப்போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் கைது செய்யப்படாமல் இருக்கும் விவகாரத்தில் பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரிவலை போட்டு வடிகட்டி ஆறே ஆறு கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது ஆணையம்.

விண்ணப்பங்களின் முதல் பரிசீலனையிலேயே சுமார் நாற்பது படிவங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய 114 விண்ணப்பங்களுக்குரிய கட்சிக்காரர்கள் நேர்முகப் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டனர். கேள்விகள் கேட்டுத் துளைக்கப்பட்டனர். அவர்களில் இருபத்தியைந்து கட்சிகள் மீள் தேர்தவுக்கு அழைக்கப்பட்டனர். அதன் பின்னர்தான் ஆறு கட்சிகள் அங்கீகாரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அதுவல்ல விடயம். இந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சில கட்சிகளின் பெயரில் நடந்த பித்தலாட்டங்கள் குறித்து இப்பத்தியில் சில வாரங்களுக்கு முன்னர் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன். வாசர்களுக்கு அவை நினைவிலிருக்கலாம்.

இந்தப் பித்தலாட்டங்களைக் கண்டு பிடிப்பதற்குத் தேர்தல் ஆணையம் துப்பறியும் திணைக்களம் போல எவ்வளவு நுட்பமாகச் செயற்பட்டது என்பதையும் கோடிகாட்டியிருந்தேன்.

பெரியசி.ஆர்.கொப்பியின் உறையைக் கழற்றி அதன் பின்புறத்தில் இருந்த கம்பியூட்டர் விற்பனைக் குறியீடு மூலம் அது எத்தனையாம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கொப்பி என்பதைக் கண்டு பிடித்தமையுடன், அதற்க முந்திய திகதியில் நடைபெற்ற கட்சிக் கூட்டம் பற்றிய கையெழுத்துகள், கூட்டத்துக்கு சில ஆண்டுகள் கழித்து தயாரான புதிய கொப்பியில் பதியப்பட்டிருக்கின்றமை வரை பல உண்மைகளைத் தேர்தல் ஆணையம் கண்டு பிடித்தமையை எழுதியிருந்தேன். இப்படி பல கட்சிகள் சமர்ப்பித்த ஆவணங்களில் பித்தலாட்டமும் குளறுபடிகளும் இருந்தமையால் அவற்றிற்கு அங்கீகாரம் கிடைக்காமல் போயிற்று.

அதுவல்ல விடயம். அதையும் தாண்டி விடயம் உண்டு.

இவ்வாறு தேர்தல் ஆணையத்தை பிழையாக வழி நடத்த எத்தனித்து, குளறுபடிகள், மோசடிகள், குழப்பங்கள் நிறைந்த ஆவணங்களைச் சமர்ப்பித்த கட்சிகளின் விடயத்தை பொலிஸிடம் முறைப்பாடாகச் சமர்ப்பித்து மோசடி, 'போஜரி' குற்றச்சாட்டுகளை முன்வைத்து விசாரணையை நடத்தி, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோருவது எனத் தீர்மானித்திருக்கின்றது தேர்தல் ஆணையம்.

புதியதாகக் கட்சி அங்கீகாரத்துக்கு விண்ணப்பித்த பலரின் நிலைமை இனி, 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்பதாகத்தான் இருக்கப் போகின்றது போல...!

தேர்தல் ஆணையம் என்றதும் இன்னொரு விடயமும் நினைவுக்கு வருகின்றது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் தேர்தல் விவகாரம் தொடர்பாக அலரிமாளிகையில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பங்கு பற்றிப் பேசியிருந்தார். அதில் அவர் சொன்ன ஒரு கருத்து எனக்குப் பெரிய ஆச்சரியத்தைத் தந்தது.

இயன்ற விரைவில் இலங்கையின் தேர்தல் வாக்களிப்பு முறையை 'எலக்ட்ரோனிக் வாக்குப் பதிவு' முறைமைக்கு மாற்ற வேண்டும் என்று அவர் கோரியிருந்தார்.

அப்படி அவர் கோரியமையில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது, இந்தியாவிலேயே அது ஏற்கனவே நடைமுறைக்கு வந்து விட்டதே என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒரு விவகாரம் உண்டு.

இலங்கையில் தேர்தல் வாக்களிப்பு முறையை இலத்திரனியில் முறைமைக்கு மாற்ற வேண்டும் என்று சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தின் முக்கிய கூட்டம் ஒன்றில முதன் முதலில் பிரேரித்தவர் – யோசனையை முன்வைத்தவர் –தேர்தல்கள் ஆணையாளர்களில் ஒருவரான இரட்ணஜீவன் கூல்தான்.

அப்போது, அடித்துப் பறித்து, கூலிடமிருந்து மைக்கைப் பிடுங்கிக் கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய, கூலின் யோசனையை நையாண்டி பண்ணி கருத்து வெளியிட்டார்.

*"அவரின் யோசனை எமக்குப் பொருந்தி வராது. அவர் ஒரு கம்பியூட்டர் இன்ஜினியர். அதனால் ஆர்வக் கோளாறினால் அப்படிப் பேசுகின்றார்."* – என்றார் தேசப்பிரிய.

அவரே இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போது இரட்ணஜீவன் கூலின் யோசனையை, அலரிமாளிகையில் போய் இருந்து கொண்டு தமது யோசனை போல முன்வைத்து முழங்கினால் ஆச்சரியம் வராதா என்ன? வாசர்களே சொல்லுங்கள்...!

– மின்னல் –

## விஜயதாஸவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட வரைவுக்கு எதிராக விஜேதாஸ ராஜபக்ஷவும் கடும் எதிர்ப்பைப் பொது இடங்களிலும் தெரிவித்து வருகின்ற நிலையில் அவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோய்த் தொற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்று சனிக்கிழமை காலை அவர் அளித்த நேர்காணலில் இந்த எச்சரிக்கையுடன் கூடிய தகவலை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டிருக்கும் அவர் –

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்கள் இளைஞர்களாக இருந்தால் உயிரிழப்புக்கள் நேரிடுவது இல்லை என்ற போதிலும் வயோதிபர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் அவர்களுக்கு தொற்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உயிரிழப்புக்கள் பதிவாகலாம்.

கடந்த காலங்களில் கந்தக்காடு மற்றும் வெலிசற கடற்படை முகாமில் தொற்று ஏற்பட்ட அநேகர் இளைஞர்கள் அல்லது வயோதிப வயதெல்லையை அண்மிக்கின்றவர்களாக இருந்தபடியினால் தொற்றுக் குணமடைந்தது. உயிரிழப்புக்களும் ஏற்படவில்லை.

எனினும் எதிர்காலத்தில் வயோதிபர்களுக்கு இந்த தொற்று தீவிரமாகப் பரவினால் உயிரிழப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரிஷாத்துக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கும் தொடர்பு இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் பேசிய அவர் –

மக்களின் கவலைகள் புரிந்து கொள்ளக்கூடியவை என்றாலும், இந்தக் கைதுகளை மேற்கொள்வதில் பொலிஸார் பின்பற்ற வேண்டிய ஒரு வழிமுறை உள்ளது.

இவரைக் கைதுசெய்ய சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு சிறிது காலம் அவகாசம் தேவைப்படுகிறது.

ரிஷாத் பதியுதீனிடம் இருந்து வாக்கு மூலம ஒன்றினை பெற்றுக்கொண்டு அவரை சி.ஐ.டியினர் கைது செய்ய திட்டமிட்டிருந்த போதும் துரதிர்ஷ்டவசமாக அவர் தலைமறைவாகி விட்டார்.

இப்போது அவரது சட்டத்தரணிகள் ரிட் விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளனர். எவ்வாறாயினும் ரிஷாத் பதியூதீன் விரைவில் கைது செய்யப்படுவார்.– என அவர் உறுதியளித்தார்.

## 'கொரோனா' மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மினுவங்கொடை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு, தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் நாள்தோறும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதையடுத்து மினுவாங்கொடை கொத்தணி கொரோனா பரவல் காரணமாக இதுவரை தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளது.

## வீடு புகுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் இந்த முதியவரின் வீட்டுக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நான்கு பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது.

பலத்த காயத்திற்குள்ளன 62 வயதான முதியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜொலிஸ் ஸ்ரார்ஸ் கிரிக்கெட் திருவிழா




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஜொலிஸ் ஸ்ரார்ஸ் கிரிக்கெட் அணி வீரர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் முகமாக ஜொலிஸ் ஸ்ரார்ஸ் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம் பருவ கால Jolly Bash League சுற்றுப்போட்டித் தொடர் 4அணிகளைக்கொண்டு ,15வீரர்களை உள்ளடக்கியதான தொடராக வரும் நவம்பர் மாதம் 7ஆம் , 8ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக அதன் உரிமையாளர் அறிமுகமும், அணி உரிமையாளர் கலந்துரையாடலும் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் Jolly Bash League நிர்வாகக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றன.

இக்குறித்த சுற்றுப்போட்டியின் ஜொலிஸ் ஸ்ரார்ஸ் வீரர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் வீரர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற வேறு கழகங்களில் பதிவு செய்யப்படாத வீரர்கள் பங்குபற்ற முடியும் என சுற்றுத்தொடர் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த தொடருக்கான ஏலம் இன்று மாலை மாலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுசில் நடை பெறும். இத்தொடரானது யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் முதலாவது ஏல முறையிலான கழகங்கத்துக்குள்ளான ரி–10 தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோல்ட்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் நிர்வாகி க.தர்மகுலசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இத் தொடரானது யாழ் மாவட்ட கிரிக்கட் ரசிகர்களிற்கு மிகவும் சிறந்த ஒரு விருந்தாக அமையும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஊரடங்கை மீறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 40 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## கிளி.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைகளாக இயங்கும் வெலிக்கந்தை மற்றும் கரடியனாறு வைத்தியசாலைகளை மாவட்ட வைத்தியர்கள் குழு நேரில் சென்று ஆராய்ந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஷ்ணபுரம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் நவம் அறிவுக்கூடமாக இயங்கிய கட்டடத்தில் கொரோனாத் தடுப்பு வைத்தியசாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிற மாவட்டங்களில் தற்போது இயங்கும் வைத்தியசாலைகளை நேரில் பார்வையிட்டு அதனை ஒத்த வசதி வாய்ப்புக்கள் மற்றும் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலேயே நேற்று கிளிநொச்சியில் இருந்து நான்கு வைத்தியர்கள் குழாம் இந்தப் பயணத்தில் ஈடுபட்டது.

இவ்வாறு பயணித்த வைத்தியர்கள் பொலனறுவை மாவட்டத்தின் வெலிக்கந்தை வைத்தியசாலைக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு வைத்தியசாலைக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு அந்த வைத்தியசாலைகளில் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு முறைமைகள் தொடர்பிலும் அறிந்துகொண்டனர்.

இதேநேரம் வெலிக்கந்தை வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவு ஒரு பகுதியில் இயங்குகின்ற போதும் ஏனைய பிரிவுகளும் வெளிநோயாளர் பிரிவும் உரிய பாதுகாப்பு முறைமையில் இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சகல தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குகின்ற கட்சிகள் இன்று(நேற்று) மீண்டும் கூடி ஆராய்ந்தோம். இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஸ்தாபன ரீதியாக செயல்பட வேண்டும் எனக் கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளும் தங்களது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

அதற்காக நாம் குழு ஒன்றை நியமித்துள்ளோம். அமைப்பு ரீதியாக எவ்வாறு நாம் செயற்பட வேண்டும், எவ்வாறு நாம் ஸ்தாபன ரீதியாக அமைய வேண்டும் என அந்த குழு ஆராயவுள்ளது.

அவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அதன் பின்னர் நாம் அந்த அறிக்கை தொடர்பில் ஆராய உள்ளோம். மேலும் இன்றைய கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம்.

எனினும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

எனினும் நாம் தமிழ்தேசிய பரப்பில் தொடர்ந்து அனைத்து கட்சிகளும் ஒன்றாக இயங்குவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் பேசவுள்ளோம்.

மேலும் தமிழர்கள் எதிர்நோக்குகின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தமிழ் தேசிய பரப்பில் இயங்குகின்ற நாம் அனைவரும் ஓரணியில் இணைந்து பயணிப்பது என தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிராக எந்த ஒரு பிரச்சினைகள் எழுந்தாலும் அனைத்து கட்சிகளும் உடனடியாக ஒன்று கூடி தீர்மானங்களை எடுத்து ஓரணியில் பயணிப்பது எனத் தீர்மானித்து உள்ளோம்.

20ஆம் திருத்தம் தற்போது பேசு பொருளாக உள்ளது. அந்த இருபதாவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எனவே நாடாளுமன்றத்தில் அந்தந்தக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழு ஒன்று கூடி அதனை எதிர்ப்பார்கள் என நான் நம்புகின்றேன். – என்றார்.

(நேற்றைய கூட்டம் பற்றிய முன்னைய செய்தி 10ஆம் பக்கத்தில்)

# 2 கடற்படையினருக்கு யாழில் தொற்று உறுதி

## அவர்களுடன் பயணம் செய்தோரை தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.18

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் கடற்படையினர் இருவருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் (16 ஆம் திகதி) இரவு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 21 வயதான பெண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 4 ஆம் திகதி காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 3.45 மணிக்கு

புறப்பட்டு கொழும்பு நோக்கி செல்லும் ரயிலில் 3 ஆம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்து காலை 11.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடைந்துள்ளார்.

பின்னர் அதே தினம் பிற்பகல் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திலிருந்து 4 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை நோக்கி செல்லும் ரயிலில் 3 ஆம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்து இரவு 11.00 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

மேலும் இதே கடற்படை முகாமை சேர்ந்த 31 வயதான ஆண் கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் வெலிமடையில் உள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்றுள்ளார்.

இவர் கடந்த 06 ஆம் திகதி அதிகாலை 6 மணிக்கு புறப்பட்டு கண்டி நகரத்தைக் காலை 11 மணிக்கு சென்றடைந்துள்ளார். அங்கிருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் 11.40 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளார். மீண்டும் அங்கிருந்து மாலை 6.50 மணிக்கு காங்கேசன்துறைக்கு செல்லும் தனியார் பஸ்ஸில் பயணித்து இரவு 7.40 மணிக்கு காங்கேசன்துறையை அடைந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட ரயில்களில் 3 ஆம் வகுப்புப் பெட்டிகள் மற்றும் பஸ்களில் இக் கடற்படை உத்தியோகத்தர்களுடன் பயணித்தவர்கள் வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு உங்களது விவரங்களை அறியத் தரவும்.

பயணம் செய்தவர்களின் விவரங்களை அறிவிப்பதன்மூலம் உங்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா எனப் பரிசோதித்து அறியவும்,உங்களது குடும்பங்களையும் அயலவர்களையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசர சேவைகளை உடனடியாக வழங்குவதற்கும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்புக் கிட்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நோய் எமது மாவட்டத்தில் பரவாதிருக்க பயணம் செய்தவர்கள் அச்சமின்றி உங்களின் தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என மாவட்டச் செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மிருக்காட்சிசாலைகள் அனைத்துக்கும் பூட்டு

கொவிட் – 19 தொற்று நிலைமை காரணமாக நாட்டின் அனைத்து மிருக்காட்சி சாலைகளையும் மறு அறிவித்தல் வரை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் விமலவீர திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் அனைத்து மிருக்காட்சி சாலைகளையும் மூடுமாறு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

அதேபோல் மிருக்காட்சி சாலைகளினுள் நுழைவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தனிமைப்படுத்தல் நிறைவு செய்து 119 பேர் வீடுகளுக்குத் திரும்பினர்!

தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து நேற்று (சனிக்கிழமை) 198 பேர் வெளியேறவுள்ளனர்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய 53 ஆயிரத்து 395 பேர் இதுவரை தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன், தற்போது, 86 நிலையங்களில் 9 ஆயிரத்து 415 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளராக நிசாந்த டி சொய்ஸா!

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த டி சொய்ஸா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## கேகாலையில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன

கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பளார் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கன பகுதியில் உள்ள ஐந்து கிராமங்களுக்குப் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இருப்பினும் ரம்புக்கன மற்றும் சமந்தகம பகுதிகள் மேலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத்மகுமார விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மினுவாங்கொடவில் கொரோனாத் தொற்றுடன் பலர் கண்டறியப்பட்டமையினைத் தொடர்ந்து 15 நோயாளிகள் மட்டுமே குறித்த பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆனந்தசங்கரிக்கு நலம் வேண்டி பிரித் ஓதி நூல் கட்டினார் தேரர்



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி நலம் பெற வேண்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் பிரித் ஓதி, நூல் கட்டி ஆசி வழங்கியுள்ளார்.

திடீர் சுகயீனம் காரணமாகக் கடந்த வாரம் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர், வீடு திரும்பிய ஆனந்த சங்கரியை நேற்று மாலை அவரது வீட்டுக்குச் சென்ற அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நலம் விசாரித்ததுடன், விரைவில் நலம் பெற ஆசி வழங்கினார்.

## செட்டிகுளத்தில் துப்பாக்கி முனையில் தாக்குதல்! 5 இளைஞர்கள் படுகாயம்!!







வவுனியா, செட்டிகுளத்தில் காணி துப்பரவாக்கும் பணிக்காகச் சென்றிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கி முனையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் செட்டி குளம், கிறிஸ்தவ குளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

செட்டிகுளம், கிறிஸ்தவ குளம் பகுதியில் காணி துப்பரவாக்கும் பணிக்காகச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்த 5 இளைஞர்கள் மீது அங்கு வந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

துப்பாக்கிகளைக் காட்டி கத்தி, வாள், கோடாரி மற்றும் இருப்புக் கம்பிகள் போன்ற கூரிய ஆயுதங்களைக் கொண்டு குறித்த குழுவினர் தம்மைத் தாக்கினர் எனவும், தம்மிடம் இருந்த பணம், நகை, தொலைபேசி போன்ற உடமைகளையும் அந்தக் குழுவினர் பறித்து சென்றுள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த 5 இளைஞர்களும் நேற்றிரவு செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, இன்று காலை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்ததாக்குதல் தொடர்பில் வவுனியா வைத்தியசாலை பொலிஸார் முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டனர். அதற்கமைய மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (100)

## உயர்தரப் பரீட்சையில் மாணவிக்கு உதவிய மேற்பார்வையாளர் கைது

க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதும் மாணவி ஒருவருக்கு தந்திரமான முறையில் விடை சொல்லிக் கொடுத்த பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாதுவ மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற பொறியியல் தொழிநுட்ப பரீட்சையில் தோற்றிய மாணவி ஒருவருக்கு பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் தந்திரமான முறையில் விடை சொல்லிக் கொடுத்துள்ளார்.

இதனை அவதானித்த பதில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த பெண் பரீட்சாத்தி தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வல்வைக்கு வந்த பெண் தனிமைப்படுத்தலுக்கு!

கொழும்பு– கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் பணியாற்றிய பெண் ஒருவர் யாழ்.வல்வெட்டித்துறைக்கு வந்திருந்த நிலையில் அடையாளம் காணப்பட்டு விடத்தல்பளை தனிமைப் படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள வீடொன்றுக்கு வந்திருந்த நிலையில் கிளிநொச்சி – விநாயகர்புரம் பகுதியை சேர்ந்த குறித்த பெண் அடையாளம் காணப்பட்ட நிலையில் பிரதேச சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றது.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த சுகாதார பிரிவினர் பெண்ணிடம் நடத்திய விசாரணையில் அவர் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணியாற்றியமை கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினால் வல்வெட்டித்துறை பகுதியில் சிறிது பரபரப்பான நிலை ஏற்பட்டிருக்கின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாகாணத் தேர்தல் எப்போது?

**தற்போதைய தேர்தல் ஆணைக்குழுவின் பதவிக் காலம் இன்னும் இருபத்தியைந்து நாள்கள்தான். வரும் நவம்பர் 12ஆம் திகதியுடன் அந்த ஆணைக்குழுவின் ஐந்து ஆண்டுகள் பதவிக் காலம் முடிவடைகின்றது.**

**பொதுஜன பெரமுன அரசு திட்டமிட்டுள்ளபடி அரசமைப்பின் இருபதாவது திருத்தம் இன்னும் நான்கு நாள்களில் நிறைவேறும் என்றால் –**

**இலங்கையில் முற்று முழுதாக சுயாதீன அதிகாரத்துடன் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஒரே தேர்தல் ஆணைக்குழு என்ற மகுடத்துடன் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தற்போதைய ஆணைக்குழுவின் பதவிக் காலம் முடிவுக்கு வந்து விடும்.**

**2015 ஜூனில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தத்தின் கீழ் 2015 நவம்பர் 13ஆம் திகதி முதல் இயங்கிய ஒரே சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இதுதான்.**

**இருபதாவது திருத்தத்தின் மூலம் இந்த ஆணைக்குழுவின் பெரும்பாலான அதிகாரங்கள், அதன் நியமனமுறைமை எல்லாம் மாற்றப்படப் போகின்றன. இருபதாவது திருத்தம் மூலம் தேர்தல் ஆணையத்திடமிருந்து பறிக்கப்பட உத்தேசிக்கப்பட்ட சில அதிகாரங்களை, உயர்நீதிமன்றம் தடுத்தாட்கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான். அத்தகைய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்திடமிருந்து பறிப்பதானால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் ஆணையைப் பெற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்திருப்பதன் மூலம் அந்த அதிகாரங்களை தேர்தல் ஆணையத்திடமிருந்து பறிப்பதற்கு முட்டுக்கட்டை போடப்பட்டிருக்கின்றது.**

**ஆனால் இருபதாவது திருத்தம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படுமானால், வரும் நவம்பர் 13ஆம் திகதிக்குப் பிந்திய புதிய தேர்தல் ஆணையத்துக்கான ஆணையாளர்களை ஜனாதிபதி தம்மிஷ்டப்படி நியமிக்கலாம். ஆணையாளர்கள் சில சமயங்களில் ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல்களாகவும், பிரிகேடியர்களாகவும், ஜனாதிபதியின் 'போடுதடிகளாகவும்' கூட இருக்கலாம்.**

**சிவில் சேவை அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திருமதி சார்ள்ஸை, வடக்கு மாகாண ஆளுநராக நியமித்தமை போல, இப்போது முப்படைகளில் உயர்மட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருப்போரையே அத்தளபதி பதவிகளிலிருந்து நேரடியாகத் தேர்தல் ஆணையாளர் கதிரைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுப்பினால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**அப்படி எல்லாம் புதிய அதிகாரங்களை – அதிர்ச்சிகளை – தனது பெறுபேறாக இருபதாவது திருத்தம் தந்து நின்றாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**ஆக இப்போது இருக்கின்ற – அடுத்த இருபத்தியைந்து நாள்களுக்குச் செயற்படப் போகின்ற – மஹிந்த தேசப்பிரிய, இரத்தின ஜீவன் கூல் ஆகியோர் உட்பட்ட மூன்று ஆணையாளர்களைக் கொண்ட ஆணைக்குழுதான் சுயாதீன அதிகாரத்துடன் தேர்தல்களை நடத்தியதான பெருமைக்குரியதாகின்றது.**

**அதன் ஆணையாளர்கள், இருபதாவது திருத்தம் நிறைவேறினாலும், நிறைவேறாவிட்டாலும் கூட, இன்னொரு தடவை தேர்தல் ஆணையாளர்களாக நியமனம் பெறுவதற்கு வாய்ப்புகள் குறைவுதான்.**

**தேர்தல் ஆணையத்தின் தற்போதைய தலைவர் மஹிந்த தேசப்பிரிய தேர்தல் பணிகளோடு நாற்பது ஆண்டுகாலம் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அத்துறை தொடர்பான சேவையில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். தமது தேர்தல் பணியிலிருந்து ஓய்வுபெற முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்.**

**தேர்தல்களை நடத்தாமல் ஆளுநர்கள் மற்றும் பிற அதிகாரிகள் மூலம் மாகாண சபைகளை நிர்வகிப்பது சட்ட முறையானது அல்ல என்று உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கின்றமையைத் தமது கடிதத்தின் மூலம் ஜனாதிபதிக்கு நினைவுபடுத்தியிருக்கின்றார் அவர்.**

**ஆகையினால், இனியும் காலதாமதப்படுத்தாமல் மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று ஜனாதிபதியை அவர் விநயமாக வேண்டியிருக்கின்றார்.**

**அது மாத்திரமல்ல, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது மக்களின் இறையாண்மையைப் பாதிக்கும் விவகாரம் என்று குறிப்பிடும் உயர்நீதிமன்றத் தீர்ப்புகளே பல உள்ளன.**

**ஆகவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து பிற ஆள்கள், ஆளுநர்கள் மூலம் மாகாண சபைகளை நிர்வகிப்பது சட்ட முறையற்றது. அத்தோடு மக்களின் இறையாண்மையைப் பறிக்கும் நடவடிக்கையாகவும் இப்போக்கு அமைகின்றது.**

**இறையாண்மை குறித்து அதிகம் பேசும் கோட்டாபய ராஜபக்ஷ அரசு, மக்களின் இந்த இறையாண்மை பறிக்கப்படும் விடயத்தில் என்ன செய்யப் போகின்றது?**

**தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுக்குமா? அல்லது நல்லாட்சி அரசு போல காலத்தை இழுத்தடிக்குமா? முடிவை மக்கள் பார்த்திருக்கின்றார்கள்.**

## ஸ்திரமற்ற அரச பொறிமுறையை 20 ஆவது திருத்தம் உருவாக்கும்!

### தேரர்கள் சிலர் கூட்டாக எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.18

20 ஆவது திருத்தம் ஸ்திரமற்ற அரச பொறிமுறையை உருவாக்கும் என தேரர்கள் சிலர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

தேரர்கள் சிலர் கூட்டாக இணைந்து 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.


முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே நாலக்க தேரர் மற்றும் எல்லே குணவங்ச தேரர் ஆகியோர் இந்த கடிதத்தை எழுதியுள்ளனர்.

20 ஆவது திருத்தம் தான்தோன்றித்தனமான நிறைவேற்றதிகாரத்தை வழங்கும் என்பதுடன், அரசமைப்பு பேரவை மற்றும் நீதித்துறையை அது கட்டுப்படுத்தும் நிலையை உருவாக்கும் எனவும் தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக பலவீனமான அமைச்சரவை ஸ்தாபிக்கப்படும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3 மோட்டார் சைக்கிள்கள் 5 சைக்கிள்கள் இனந்தெரியாதோரினால் தீ வைக்கப்பட்டன!

### அம்பாறை கல்முனையில் சம்பவம்





அம்பாறை – கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறின் பீல்ட் தொடர்மாடி குடியிருப்புக்கு முன்னால் தரித்துவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் ஆகியவைகள் இனந்தெரியாத சந்தேகநபர்கள் தீயிட்டு நாசமாக்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 5 சைக்கிள்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்தால் பாதிப்புக்குள்ளான இடத்தில் மின்சார மின்மானிகள் சேதமடைந்த போதிலும் மின்கசிவு ஏற்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எல். முஹம்மட் ஜெமில் தலைமையிலான பொலிஸ் குழுவொன்று சம்பவ இடத்திற்கு சென்று முன்னெடுத்துள்ளனது.

இந்த வீட்டுத்தொகுதியில் இனந்தெரியாத சந்தேகநபர்கள் சிலர், திடீரென உட்புகுந்து, இத்தீயை வைத்துத் தப்பி சென்றனர் என குடியிருப்பில் வசிக்கும் மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே பிரசவத்தில் மூன்று பெண் குழந்தைகள் அம்பாறை ஆஸ்பத்திரியில் மீளவும் சுக செய்தி



அம்பாறை மாவட்டம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு திராய்மடு பகுதியைச்சேர்ந்த பெண்மணியொருவர் ஒரே சூலில் 3 பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

31 வயதுடைய மட்டக்களப்பு திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் பிரவசத்துக்காகக் கடந்த செவ்வாயன்று காலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் இடப்பற்றாக்குறை காரணமாக வியாழனன்று கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். தொடர்ந்து நேற்றுப் பிற்பகல் அங்கு அறுவை சத்திர சிகிச்சை மூலம் 3 பெண் குழந்தைகளை அவர் பெற்றார். அவரும் குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சத்திர சிகிச்சையை வைத்தியர் எம்.கே தௌபிக், மகப்பேற்று வைத்திய நிபுணர் ராஜிவ் விதானகே தலைமையிலான வைத்திய குழுவினர் மேற்கொண்டனர்.

பெண்ணின் கணவர் கடற்தொழிலாளி. ஏற்கனவே இத்தம்பதியினருக்கு பெண், ஆண் என இரு குழந்தைகள் உள்ளன.

மேலும் இவ்வைத்தியசாலையில் இவ்வாண்டில் கிடைக்கப்பெற்ற ஒரே சூலில் பெறப்பட்ட 3 குழந்தைகள் நிகழ்வில் இது நான்காவது சந்தர்ப்பம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸ் அனர்த்தத்தின் காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளிகள் வரவு குறைவடைந்துள்ள நிலையில் இச்சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குடிவரவு, குடியகல்வு திணைக்கள பணிகள் திங்கள் முதல் ஆரம்பம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நாளை திங்கட்கிழமை முதல் மக்கள் சேவைகளுக்காக திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைகளைப் பெறுவதற்கு அலுவலகத்திற்கு வருவதற்கு முன்பு, பொது மக்கள் வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கம் அல்லது திணைக்களத்தின் வலைத்தளம் மூலம் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாதவர்கள் அலுவலக வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று திணைக்களம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், முடிந்தவரை அருகிலுள்ள பிராந்திய அலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களை குடிவரவு மற்றும் குடிவரவு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சமூகப் பரவல் தொடக்கம் என எச்சரிக்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுப்பு!

மினுவாங்கொட பகுதியில் தொற்று பரவியமைக்கான ஆதாரம் இன்னும் அறியப்படாத நிலையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்ட பகுதிகளில் சமூக பரவல் ஏற்கனவே ஏற்பட்டிருக்கலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போது நாட்டில் அதிகரிக்கும் கொரோனா தொற்று மினுவாங்கொடவுடன் தொடர்புடையன என அதிகாரிகள் கூறினாலும் சமூக பரவல் தொடங்கியிருக்கலாம் என்பதற்கான அறிகுறி இது என்றும் அச்சங்கத்தின் உறுப்பினர் டொக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அபாய வலையங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறும் கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்த மாவட்டங்களுக்கு இடையில் தடைவிதிக்க வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளமையானது ஒரு தீர்வு அல்ல என்றும் ஏனெனில் மக்கள் இன்னும் அனுமதிப்பத்திரத்தை காட்டி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கையின் விரைவான அதிகரிப்பை கட்டுப்படுத்த நாட்டில் தற்போது உள்ள சுகாதார முறை போதுமானதாக உள்ளதா என்ற கவலையையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுப்பியுள்ளது.

# மைத்திரி நான்காவது நாளாக ஆணைக்குழுவில் வாக்குமூலம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று சுமார் 3 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கும் நான்காவது நாள் இதுவாகும்.

இறுதியாக நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கிய அவர், பல்வேறு முரணான வாக்குமூலங்களை வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் 22ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேய்ச்சல் தரைகளை அபகரிக்க வேண்டாம்!

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள மேய்ச்சல்தரை காணியில் அத்துமீறி குடியேறியோரை வெளியேற்றுமாறு கூறி ஆர்ப்பாட்டம் ஒன்று இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

இலங்கை மக்கள் தேசியகட்சியின் செயலாளர் நாயகம் என்.விஷ்ணுகாந்தனின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு நகர் காந்திப் பூங்கா முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை மக்கள் தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலந்தமடு, மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றவும், மயிலந்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையினைமட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு சட்ட ரீதியாக கைளிக்கவும், பல ஆண்டுகளாக மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளைப் பராமரித்த காணியை அபகரிக்க வேண்டாம் என்பன போன்ற விடயங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் முன்வைத்தனர்.

# வெடுக்குநாறிமலை ஆலய வழிபாட்டுக்குத் தடை; உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு

## விரைவில் தாக்கலாகும் என்கிறார் சுமந்திரன்

வவுனியா வடக்கு – வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக, உயர்நீதிமன்றத்தில் விரைவில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



ஆலய வழிபாட்டிற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளமை தொடர்பாக, ஆலய நிர்வாகத்தினரை, வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில், சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அடியவர்கள் சென்று வழிபடுவதற்கு நெடுங்கேணி பொலிஸார் தடைவிதித்து வருகின்றனர்.

ஆலயத்தில் பூசை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஆலயத்தின் பூர்வீகம், வரலாறு என்பனவற்றை கருத்தில் கொண்டு மக்கள் அங்கே வணங்குவதற்கான உரித்து உள்ளது. அதை எவரும் தடுக்க முடியாது என்ற ரீதியிலே அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்று உடனடியாகத் தாக்கல்செய்யப்படவுள்ளதாகவும்சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலன்னறுவ ஆஸ்பத்திரியின் வார்ட் முடக்கம்

கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டமையை அடுத்து பொலன்னறுவ வைத்தியசாலையின் 22 ஆம் இலக்க வார்ட் முடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவசர தேவைகளை தவிர வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வைத்தியசாலை தாதியர்கள் 42 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உன்கருணை மழைபொழிந்து உளம்மாற்று தாயே!

கல்வியொடு செல்வம் தரவேண்டும் தாயே
கசடகல என்றும் துணையாவாய் தாயே
உள்ளமதில் என்று முறுதிநிறை தாயே
உன்கமல பாதம் துணையெனக்கு தாயே

வாய்மையுடன் வாழ வரமருள வேண்டும்
வாழும்வரை நோய்கள் வராதிருக்க வேண்டும்
தாழ்வு மனப்பாங்கு தளர்ந்துவிட வேண்டும்
தாயே உன்பாதம் சரணடைந்தேன் அம்மா

வாதமது செய்யும் மனமகல வேண்டும்
போதைநிறை எண்ணம் பொசுங்கிவிட வேண்டும்
காதலுடன் வாழ்வை வாழ்ந்துவிட வேண்டும்
கருணையுடன் என்னைக் காத்திடுவாய் தாயே

ஆசையெனும் தீயை அணைத்துவிடு தாயே
அகந்தையெனும் பேயை அழித்துவிடு தாயே
பாசமெனும் உணர்வை நிறைத்துவிடு தாயே
பக்தியுடன் உன்னைப் பரவிவிட அருள்தா

அகவொழுக்கம் அமைய அருளிவிடு அம்மா
அறமதனை மனதில் நிறைத்துவிடு அம்மா
குறைபகரும் குணத்தை கொன்றிடுவாய் அம்மா
குவலயத்தை நாளும் காத்திடுவாய் அம்மா

முத்தமிழும் எனக்கு தந்திடுவாய் தாயே
முழுநிலவாய் நீயும் விளங்குகிறாய் தாயே
அத்தனைக்கும் காரணமாய் ஆகுகிறாய் தாயே
அடைக்கலமே தந்துவிடு அம்மாவே நீயும்

அலைபாயும் மனமகல அம்மா பாராய்
நிலையான செல்வமதை நீயெனக்குத் தாராய்
உலைபோல கொதிக்கிறது மனமென்றும் தாயே
உன்கருணை மழைபொழிந்து உளம்மாற்று தாயே

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா

# வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளையதினம் சுகவீன லீவுப் போராட்டம்

வட மாகாண அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள் சங்கம் நாளை திங்கட்கிழமை வட மாகாணம் தழுவிய ரீதியில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வட மாகாண அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள் சங்கமாகிய நாம் வட மாகாணத் தில் உள்ள மத்திய மற்றும் மாகாண சேவை களில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கொண்ட தொழிற் சங்கமாகும். அந்தவகையில் நாம் எதிர் வரும் 19ஆம் திகதி (திங்கட்கிழமை) வட மாகாணம் தழுவிய ரீதியில் சுகயீன விடு முறைப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

தனது குடும்பச் சூழ்நிலை காரணமாக தினமும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டிலிருந்து கடமைக்காகச் சென்று வந்த நிறைமாத கர்ப்பிணியாகக் காணப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தனக்கான தற்காலிக இடமாற்றத்தை இரண்டு தடவைகள் கோரியிருந்தும் அது குறித்த திணைக்களத் தலைவரால் மறுக்கப்பட்டதன் காரணமாக தொடந்தும் தனது பிரயாணத்தை மேற்கொண்ட நிலையில் அவர் தனது குழந்தையைப் பிரசவிப்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் இறந்துள்ளாயர். இது போன்ற சம்பவங்கள் பல அவ்வபோது வடமாகாணத்தில் இடம்பெற்ற வண்ணமே உள்ளது.

இந்தத் துன்பியல் நிகழ்வு அரச உத்தியோகத்தர்களாகிய அனைவரையும் மிகுந்த மன உளைசலுக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளாக்கியுள்ளது. குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றம் கோரிய சந்தர்ப்பத்தில் அது மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட்டிருப்பின் குறித்த இழப்பைத் தவிர்த்திருக்க முடியும் என்று நாம் கருதுகின்றோம்.

இந்த மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்தும் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உரிய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலும் இந்தச் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தனியொரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மாத் திரம் நடந்த விடயமாகக் கருதாமல் எந்தவொரு அரச உத்தியோகத்தருக்கு நடந்திருந்தாலும் அதனை நாம் மனிதாபிமான முறையில் அவசியமாக அணுக வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் போராட்டத்துக்கு வட மாகாணத்தில் காணப்படும் அனைத்து அரச சேவையாளர்களது தொழிற்சங்கங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து வலுச் சேர்க்கக் கூடிய வகையில் சுகயீன விடு முறையை அறிவித்து ஆதரவு தருமாறு வேண்டுகின்றோம் – என்றுள்ளது.

# நியாயமானதா?

## வடமாகாண சுகாதார சேவை சாரதிகளின் இடமாற்றம்

விவேகானந்தனூர் சதீஸ்




சுகாதார – வைத்திய சேவை என்பது கால மாற்றங்களுக்கு அப்பால் எப்போதும் எங்கேயும் எல்லோருக்கும் அத்தியாவசியமான ஒரு தேவையாகும். இத்துறையின் முக்கியத்துவம் கருதி அரசாங்கத்தின் வரவு – செலவு திட்டமாக இருப்பினும் சரி, அரசு சாரா அமைப்புகளின் நிதி அனுசரனைகளாக இருப்பினும் சரி, தேசிய பாதுகாப்பிற்கு அடுத்தபட்சமாக இந்தச் சுகாதார வைத்திய துறைக்கே அதிகளவிலான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சுகாதார சேவைத்துறையில் வைத்திய நிபுணர்கள் முதற்கொண்டு சுத்திகரிப்புத் தொழிலாளி வரையிலான அனைத்துப் பணியாளர்களும் முக்கியமானவர்களே. ஒரு தரப்பினரின் ஒத்துழைப்பின்றி மற்றைய தரப்பு பூரணமான எந்தச் சேவையையும் வழங்கி விட முடியாது. எமது நாட்டைப் பொறுத்த மட்டில் இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த யுத்தகாலம், ஆழிப்பேரலை அனர்த்த காலம், மலேரியா, டெங்கு போன்ற நோய்த்தாக்க காலம், தற்போதைய கொரோனாத் தொற்று நோய்க்காலம் எனப் பல்வேறு காலச் சம்பவங்களை சாட்சிப்படுத்த முடியும்.

நாட்டில் ஒன்பது மாகாணசபை அதிகார அலகுகள் செயற்பட்டு வருகின்ற நிலையில் அண்மைக் காலமாக வடக்கு மாகாண ஆளுகைக்கு உட்பட்ட சுகாதார சேவை நிறுவனங்களில் மாத்திரம் சுகாதாரச் சேவை சாரதிகளை வேறு அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இல்லை, அப்படிச் செய்வது பொருத்தமற்றது. எங்களது நியமனம் 'இணைந்த சேவை' என்கின்ற வகையறைக்குள் இருந்தாலும் கூட, சுகாதார சேவை சார்ந்த எமது இத்தனை வருட பட்டறிவும், கற்றறியும் மக்களுக்குப் பயன்படாமல் திட்டமிட்டு வீணடிக்கப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது! எனத் தெரிவிக்கும் வடமாகாண சுகாதார சேவை சாரதிகள்




சங்கம், தமது பக்க நியாயத்தை சான்றாதாரங்களுடன் ஒப்புவித்து சுகவீன லீவுப்போராட்டங்களை மேற்கொண்டு வருகிறது. வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சுகாதாரச் சேவைச் சாரதிகள் கவனவீர்ப்புக்களில் பங்கெடுத்து வருகின்ற போதிலும், நோயாளர் காவு வண்டிச்சேவைக்கும் நிறுவனத் தலைவர்களின் போக்குவரத்துச் சேவைக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணமே அதனை முன்னெடுக்கின்றனர்.

வேறெந்த மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படாத பொருத்தமற்ற இந்த சாரதிகளது இடமாற்றத்தின் நோக்கம் என்ன? – என்ற கேள்விக்கு, வட மாகாண பிரதம செயலக அதிகாரிகளின் பதிலென்ன?

“சுற்றுநிருபங்களின் அடிப்படையிலேயே நாம் செயற்படுகின்றோம். அதற்கப்பால் யதார்த்தம், மனிதாபிமானம், பட்டறிவு, கற்றறிவு பற்றியெல்லாம் எம்மால் யோசிக்க முடியாது.” என்பதாக அவர்களின் பதில் அமைகின்றது. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் இந்தப்பதிலானது, சுகாதாரசேவை சாரதிகளின் போர்க்கால அர்ப்பணிப்புக்களையும் தியாகங்களையும் புறமொதித் தள்ளும் விதமான அதிகாரப்பலத்தைப் பிரதிபலிக்கின்றதா? என அறிவுப்புலத்தினர் ஆதங்கப்படுத்தினர். அத்தியாவசிய சேவை நல்கும் அரச நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தனியே சுற்று நிருபங்களுக்குள் மாத்திரம் வலிந்து நின்று அடம்பிடித்துக்கொண்டு சிறந்த சேவையினை வழங்கிவிட முடியாது. அனர்த்தங்கள், அவசர தேவைகள் ஏற்படுகின்றபோது மனித உயிர்களுக்கும் மனிதாபிமானத்திற்கும் முன்னுரிமையளித்து செயற்படுவது அவசியமாகின்றது. 2009 இற்கு முற்பட்ட யுத்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைப்பணிப்பாளர்கள் இந்த அவசியத்தை உணர்ந்து செயற்பட்டிருந்தனர். ஆகையினாலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரை நிவாரணமேனும் அலைச்சல் இன்றி கிடைக்கப்பெற்றது. அவ்வாறு சுற்று நிருபங்களுக்கும் மனிதாபிமானத்திற்கும் இடைநடுவில்நின்றுகொண்டுசேவைநல்கியவர்களுள் வடமாகாண சுகாதார சாரதிகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொதுவாக சாதாரண துறை சாரதிகளைப் பார்க்கிலும் சுகாதார சேவைச் சாரதிகள் முற்றிலும் வேறுபட்ட தகமைத் தேர்ச்சிகளை கொண்டிருக்கின்றார்கள். அதை காலச்சூழல் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ளன. அதுதவிர, சுகாதார சேவைச் சாரதிகளின் செயற்திறனை மேலும் மேம்படுத்துவதற்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் இவர்களுக்கு பல்வேறு பயிற்சிப்பட்டறைகளை வழங்கியுள்ளது. அந்தவகையில்,

ஐ.ஓ.எம் நிறுவனம்: முதலுதவி மற்றும் நோயாளிகளைக் கையாளுதல் என்கிற பயிற்சிகளை வழங்கியுள்ளது.

சென் – ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு: நோயாளர்காவு வண்டித்தொழிநுட்பம், வாகன இயந்திரத் தொழிநுட்பம், அனர்த்த முகாமைத்துவம், மருத்துவ உபகரணக் கையாளுகை உட்பட இன்னும் பல பயிலமர்வுகளை மேற்கொண்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடம்: சுகாதார சேவைச் சாரதிகளுக்கென விசேட மருத்துவ முகாம் களப்பயிற்சி, நெருக்கடி நிலைமைகளில் தீர்மானமெடுத்தல், மனிதநேயம், மற்றும் அர்ப்பணிப்புடனான தியாக மனப்பாங்கை வளர்த்தல் போன்ற போதனைப் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

குறித்த பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றிய வடமாகாண சுகாதார சேவைசாரதிகளுக்கு மேற்கூறிய அத்தனை பயிற்சிகளுக்கும் தனித்தனி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான தகைமைகளை உடைய சாரதிகளே மனித உயிர்காக்கும் மருத்துவ சேவைக்குப் பொருத்தமானவர்களா இருக்க முடியும். இதன் அடிப்படையிலேயே ஏனைய எட்டு மாகாணங்களினதும் சுகாதார சேவைச் சாரதிகள் வேறெந்த துறைகளுக்கும் இடமாற்றம் செய்யப்படுவதில்லை. இவர்களது நீண்டகால சேவை அனுபவத்தை நுகர்வோரான மக்களுக்கு கொண்டு செல்வதில் அந்த அதிகாரிகள் வெற்றி காண்கிறார்கள். இந்த நிலையில், வடக்கு மாகாண சபை மாத்திரம் சுற்றறிக்கை என்ற சூத்திரத்தை பிடித்து வைத்துக் கொண்டு சுகாதார சேவைச் சாரதிகளை இடமாற்றம் செய்ய முற்படுகின்றது. வடக்கில் மட்டும் ஏனிந்த் வெறுப்பும் வேறுபாடும் காட்டப்படுகின்றது? இதில் என்ன அரசியல் ஒளிந்திருக்கப்போகின்றது.? இவ்விடயத்தில் தொடர்ந்தும் பொறுப்பதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மை தொடருமாயின் இறுதியில் அதன் பாதிப்பு அப்பாவி மக்களையே சென்று சேரும்.

உண்மையில் கடந்த கால நிலைமையினை அறிந்திராத அல்லது உணர்ந்திராத அதிகாரிகளால் இவ்வாறான பிரச்சினைகள் எழுகின்றனவா என எண்ணத்தோன்றுகின்றது. யுத்த பூமியில் இருவேறு துருவங்களாக பரஸ்பர மோதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தரப்புகளுக்கு மத்தியில் ஊடாடிப் பணிபுரிவதென்பது சாதாரண கற்பனைக்கு அப்பாலானது. பயண அனுமதி, புலன்விசாரணை, சோதனைச்சாவடி எனப் பல தடைகளைக் கடந்து பதுங்கு குழிகளுக்குள்ளும் பல் குழல் எறிகணைக்குள்ளும் புரண்டெழுந்து நேர காலம் பாராமல் போரின் இறுதித்தருணம் வரை உயிரைப் பணயம் வைத்து மக்கள் பணி செய்த ஒரே தரப்பு இந்த வடமாகாண சுகாதார சேவைச் சாரதிகள் தான் என்பதை யாரும் எப்போதும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. சுகாதார சேவையின் சாரதிகள் ஒரு வீரனை போன்று செயலாற்றி வேண்டியிருந்தது. தமது சாரதியத்தினாலும் சாதுரியத்தினாலும் நோயாளிகளை காப்பாற்றுவது மட்டுமல்லாது தம்மையும் தற்காத்துக் கொள்ளப் போராடினார்கள். இதற்கப் பல சான்றாதாரங்கள் இருக்கின்றன.

2006 ஓகஸ்ட் – 08 அன்று, நெடுங்கேணி வைத்தியசாலைக்குரிய நோயாளர் காவுவண்டி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு சென்று திரும்பும் வழியில் கிளைமோர்க்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டது. அதன்போது, மூன்று பிள்ளைகளின் தந்தையான சாரதி கோபால் சுந்தரம் உட்பட ஐந்து மருத்துவ பணியாளர்கள் பலியாகினர்.

2007 ஜீலை – 10 அன்று நடமாடும் மருத்துவ முகாமொன்றை செய்துவிட்டு ஏ9 சாலையூடாக கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த வாகனம் மீது கிளவன்குளம் பகுதியில் வைத்து கிளைமோர் குண்டுத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது. இதில்கிளிநொச்சிப்பிராந்திய சுகாதார சேவைப்பணிமனையின் சாரதியான ஒரு குழந்தையின் தந்தை திவாகரன் பலியாகினார்.

2007 நவம்பர் – 25 அன்று இடம்பெயர்ந்த மக்களுக்கான விசேட மருத்துவ முகாமிற்கான மருத்துவப் பொருள்களை கொண்டு சென்ற போது முழங்காவில் மருத்துவ மனைக்குச் சொந்தமான ìÏ–6479 இலக்க நோயாளர் காவு வண்டி மீது முற்கொம்பன் பகுதியில் வைத்து கிளைமோர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது சாரதியான பா. தவசீலன் படுகாயத்துக்குள்ளாகி நீண்ட கால மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். குறித்த இந்தச் சாரதியும் கடந்த வருடம் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

“சுகாதார சேவைச்சாரதிகள் பொருத்தமற்ற இடமாற்றத்தை இரத்துச்செய்து தம்மை சுகாதார சேவைக்குரிய தனித்துவச் சாரதிகளாக அங்கீகரிக்க வேண்டும்” என்கின்ற தர்க்கரீதியான கோரிக்கை மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகளிடமும் துறைசார்ந்த மத்திய அமைச்சர்களிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சர் ரியல் அட்மிரல் (ஓய்வுபெற்ற) கலாநிதி சரத்வீரசேகரா அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர், கௌரவ. அங்கஜன் இராமநாதன் ஆகியோர் வடமாகாண சுகாதார சேவை சாரதிகளின் இடமாற்றத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறும் அதற்காக அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யவிருப்பதாகவும் வடமாகாண ஆளுநருக்கு அறிவித்துள்ளனர். இதைவிட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA) வடமாகாண சுகாதார சேவை சாரதிகளின் பொருத்தமற்ற இடமாற்றத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென மாகாண ஆளுநரைக் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆகவே ஆளுநர் செயலகம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, பேரவைச் செயலகம், மாகாண சுகாதார சேவை மற்றும் சுகாதார திணைக்களம் என்பன இவ்விடயத்தில் மக்கள் நலனை கருத்திற்கொண்டு முடிவுகளை எடுப்பதே சிறந்தது.

# கொழும்பு துறைமுக ஊழியர் இருவருக்குக் கொரோனா!

கொழும்பு துறைமுகத்தின் டொக்கியாட் பகுதியில் பணியாற்றும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக கொழும்பு துறைமுகத்தின் டொக்கியாட் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளவும் கூறப்படுகின்றது.

மேலும், அந்தப் பகுதிக்குள் பிரவேசிப்பதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

அத்துடன், அந்தப் பகுதியில் பணியாற்றிய ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## நீதித்துறையின் முன்னேற்றம் ஆராய 5 குழுக்கள் நியமிப்பு!

நீதித் துறையின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் நோக்கிலும் ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நீதியமைச்சர் அலி சப்ரியால் இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுக்களை நியமிப்பதற்கு, நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைத்ததன் பின்னரே, இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நீதித் துறையில் காணப்படும் சிக்கல்களை, மூன்று வருட காலத்துக்குள் தீர்ப்பதே, இதன் பிரதான நோக்கமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, நீதித் துறையில் காணப்படும் சிக்கல்களை அடையாளங் கண்டு, தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும், தீர்வுகளை முன்வைப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மாகாணசபைத் தேர்தலை நடத்த உடனே நடவழக்கை எடுக்கவும்!

## ஜனாதிபதியிடம் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை



ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

தேர்தல்களை நடத்தாமல் ஆளுநர்கள் மற்றும் பிற அதிகாரிகள் மூலம் மாகாண சபைகளை நிர்வகிப்பது சட்டபூர்வமானது அல்ல என எஸ்.சி.எவ்.ஆர் 35/2016 மனு மீதான விசாரணையின் உயர் நீதிமன்றத் தீர்ப்பை சுட்டிக்காட்டி அவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் சபாநாயகர், அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து 2018 நவம்பர் முதல் டிசெம்பர் வரை நிர்வாகித்த இடைக்கால அரசாங்கத்தில் மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தை 2017 ஆம் ஆண்டில் சில ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

மேலும் 1988 ஆம் ஆண்டு மாகாண சபை சட்டத்தின் பழைய விதிகளைச் செயல்படுத்துதல். அந்த முன்மொழிவைச் செயல்படுத்துவதன் மூலம், ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் விரைவில் நடத்தப்படலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு கருதுகிறது என மஹிந்த தேசப்பிரிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு பிரதமர், சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள சேவைகள் யாவும் வழமைக்கு திரும்பும்!

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள சேவைகளை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் மீண்டும் வழமைக்கு கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் சுமித் சி.கே. அழகக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவலைத் தொடர்ந்து, கடந்த 07 ஆம் திகதி முதல், நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர மற்றும் கம்பஹாவிலுள்ள மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அத்துடன், குறிப்பிட்ட இலக்கங்களை தொடர்பு கொண்டு சேவைகளைப் பெறுவதற்கான முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு, அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாகன உரிமை மாற்றம் உள்ளிட்ட விண்ணப்பங்களை, அந்தந்த பிரதேச செயலகங்களில் ஒப்படைப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றமையால், அத்தியாவசிய சேவைக்காக மாத்திரம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு வருமாறும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# சட்டத்தை மலினப்படுத்துவதாக பொலிஸார் செயற்படக்கூடாது!

## சட்டமா அதிபர் அறிவுரை

ரிஷாத் பதியுதீன் தொடர்பில் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பொலிஸாருக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் ரிஷாத்தை கைது செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

எனினும், ரிஷாத் பதியுதீனை இதுவரையில் பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்நிலையில், சட்டத்தை மலினப்படுத்தும் வகையில் பொலிஸார் செயற்படக்கூடாதென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் வழங்கும் உத்தரவுகளையும், சட்டமா அதிபர் வழங்கும் அறிவுறுத்தல்களையும் பொலிஸார் மெத்தனமாகக் கருதி விடக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரிஷாத் கைது செய்யப்படாமை தொடர்பில் சட்டமா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பொது மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பொலிஸார் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை மீறிச் செயற்படும் முன்னாள் அமைச்சருக்கும், அவருக்கு உதவுவோருக்கும் எதிராக சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சட்டமா அதிபர், பொலிஸாருக்குக் கடுமையான தொனியில் பணிப்புரை விடுத்துள்ளார்

# சஹ்றான் குழு பயன்படுத்திய கார் மறைத்துவைத்த நிலையில் மீட்பு!



பயங்கரவாதி சஹ்ரான் குழு பயன்படுத்திய கார் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு காத்தான்குடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ள முகமது கனிபா முகமது அக்கிரம் என்பவர் பயன்படுத்தி வந்த காரே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கார், மட்டக்களப்பு, காத்தான்குடி நிஸவி நகரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பு குற்றவியல் பிரிவு பொலிஸார் மீட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் முகமது கனிபா முகமது அக்கிரம் என்பவர் கடந்த வருடம் ஏப்ரல் 25 ஆம் திகதி காத்தான்குடியில் வைத்து கைதுசெய்யப்பட்டு மொனராகலை சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முகமது கனிபா முகமது அக்கிரம் என்பவரின் பெயரில் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த குறித்த கார் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, மாவட்ட குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி. டி.எஸ்.டி. பண்டார தலைமையில் என்.அன்பரசன், அருள்குமார், பந்துல, சரோன் ஆகியோர் கொண்ட பொலிஸ் குழுவினர் இந்தப் பிரதேசத்தில் கார் தரிப்பிடம் ஒன்றில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக மறைத்து வைக்கப்பட்டிருந்த காரைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் காரில் காத்தான்குடியில் இருந்து நுவரெலியா பயிற்சி முகாமுக்கு பயிற்சிக்காக பயிற்சியாளர்களைக் கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்டதா என்ற அடிப்படையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வளாகத்தில் இரு ஆடைத் தொழிற்சாலைகளுக்கு பூட்டு?

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வளாகத்தில் செயற்படும் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் தொடர்ச்சியாக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அரியாலையில் கள்ளமாக மண் வெட்டியோரைத் தேடி வேட்டை

யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் சட்டவிரோத மணல் கொள்ளையில் ஈடுபட்ட கொண்டி ருந்த வேளையில் மதில் இடிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்திருந் தார்.

நெல்லியடிப் பகுதியைப் பிறப்பிடமாகவும் தற்போது திருமணமாகி அரியாலை நாவலடி பகுதியில் வசித்து வந்தவருமான சின்னராசா நந்தீஸ்வரன் வயது 45 என்பவரே நேற்றுக் காலை அரியாலைப் பகுதியில், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு மதில் இடிந்து விழுந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இவருடன் வருகை தந்து மணல் அகழ்வில் இருவர் ஈடுபட்டனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

உயிரிழந்தவருடன் இணைந்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மற்றைய இருவரையும் கைது செய்வதற்காக யாழ் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் விசேட அணியினர் களமிறக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

வாழ்க்கைத் தொகுப்பு

ப்ரியமதா பயஸ்

# இலங்கையில் சமூக சேவைக்கு தன்னை அர்ப்பணித்த வேதவல்லி கந்தையா



இலங்கையின் வடக்கு மாகாணத்தின் வட்டுக்கோட்டை என்ற ஊரில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கூட்டுக் குடும்பத்தில் பிறந்த பெண்தான் வேதவல்லி கந்தையா.

பெண்கள் உயர் கல்வி கற்பது அவசியமில்லை என்ற சிந்தனை மேலோங்கியிருந்த அக்காலத்தில் தனது கல்வியை சிறப்புடன் விருத்திசெய்து ஆசிரியராக வெளியே வந்தார்.

பெண்களின் கல்வி மேம்பாட்டுக்காகத் தீவிரமாக உழைத்த வேதவல்லி ஆசிரியரான தருணம் அக்கிராமத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்ணும் உயர் கல்வியை மேற்கொண்டு ஆசிரியராக தொழில் புரிந்தனர்.

வேதவல்லி தனது ஆசிரியத் தொழிலை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தார். இவரது சேவை பாடசாலையுடன் மட்டுப்பட்டிருக்கவில்லை. கிராமத்தில் இளம் பெண்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தினார். சமூகப் பிரச்சினைகளிலும் ஈடுபாடு கொண்டார். இவரது சமூக சேவைச் செயற்பாடு நீர்வேலிக் கிராமத்தைச் சேர்ந்த கல்விமானான எஸ்.கே. கந்தையாவின் கவனத்தை ஈர்த்தது. இருவரும் மனமொத்துத் திருமணபந்தத்தில் இணைந்தனர்.

வேதவல்லி கந்தையா ஒரு கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளர் சமூக சேவகியான வேதவல்லி கந்தையா அரசியல் செயற்பாட்டாளராகவும் மாறினார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயற்பட்ட வேதவல்லி கந்தையா அம்மையார் அவர்கள் அக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பரிட்சயமுடைய வேதவல்லி யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் மகளிர் அமைப்பு, யாழ். மாவட்ட மகளிர் குழு, யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம், வலிகாமம் கிழக்குப் பகுதி மகளிர் குழுக்கள், நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம், நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம் போன்ற பல அமைப்புகளின் தலைவராகவும் உபதலைவராகவும் போகராகவும் பணியாற்றியமையுடன் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

இவரின் சமூகசேவையை கௌரவித்து அவருக்கான நினைவுச் சிலை நீர்வேலியில் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சம்.

**பெண்கள் உயர் கல்வி கற்பது அவசியமில்லை என்ற சிந்தனை மேலோங்கியிருந்த அக்காலத்தில் தனது கல்வியை சிறப்புடன் விருத்தி செய்து ஆசிரியராக வெளியே வந்தார்.**

# சுயமதிப்பீடு செய்வது ஏன் மிகவும் முக்கியம் ?

நம்மை நாமே 'சுய மதிப்பீடு ' செய்து கொள்வது என்பது வாழ்க்கையில் முன்னேற வேண்டும், அடுத்த நிலைக்கு போக வேண்டும் என்று எண்ணம் உள்ளவர்களுக்கு அதாவது நம் எல்லோருக்கும் முக்கியமானது.



உதாரணத்துக்கு இதை படியுங்கள் – ஒரு சிறு கதை.

ஒரு சிறுவனுக்கும், வீட்டு உரிமையாளர் பெண்ணிற்கும் இடையே தொலைபேசியில்நடக்கும்உரையாடல் தான் இது .

**சிறுவன்:** உங்கள் வீட்டு தோட்டத்தை நான் சுத்தப்படுத்தட்டுமா?

**பெண்:** அந்த வேலைக்கு ஏற்கனவே ஒரு பையன் இருக்கிறானே?

**சிறுவன்:** அவனை விடக் குறைவான சம்பளம் கொடுத்தால் போதும். நான் நன்றாக வேலை செய்வேன்.

**பெண் :** வேண்டாம், அவனே நன்றாக வேலை செய்கிறான்.

**சிறுவன் :** வீட்டை சுத்தப்படுத்தும் வேலை கூட செய்வேன்.

**பெண் :** வேண்டாம் . அதையும் அவனே நன்றாக செய்கிறான்.

இதன்பின், சிறுவன் 'நன்றி ' என்று கூறி தொலைபேசியை வைக்கிறான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கடைக்காரர், அந்தச் சிறுவனிடம், 'வேலை செய்ய வேண்டும் என்ற உன் எண்ணம் எனக்கு மிகவும்பிடித்திருக்கிறது நீ என் கடைக்கு வேலைக்கு வருகிறாயா'? என்று கேட்கிறார்.

அதற்கு அந்தச் சிறுவன், 'நான் இப்போது தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த பெண்மணியின் வீட்டில்தான் வேலை செய்கிறேன். நான் செய்யும் வேலை அவர்களுக்கு திருப்தி தருகிறதா என்று அறியவே தொலைபேசியில் கேட்டேன்.'– என்று சொல்லிவிட்டு சிட்டாக ஓடி மறைந்து விடுகிறான். இதுதான் சுயமதிப்பீடு.



# பணம் படைத்தவர்களாக எல்லோராலும் ஆகமுடியும்

பணம் படைத்தவர்களாக எல்லோராலும் ஆகமுடியும்இ ஆனால் பணக்காரர்களாக நிலைப்பதுதான்மிக முக்கியமானது.

அப்படி நிலைப்பதற்கு ஒரு முக்கியமான தகுதி வேண்டும். அது எது தெரியுமா?

இப்போது நீங்கள் ஒரு பெரிய பணக்காரராக இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம் . திடீரென்று ஒரு நாள் உங்களுக்கு நஷ்டம் வந்து நீங்கள் அடிமட்ட ஏழைஆகிவிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம் .

இப்போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும் ?

நடந்ததை நினைத்து கவலை படுவீர்களா? என்னிடம் இருந்த அத்தனை வசதி வாய்ப்புகளும் போய்விட்டதே என்று புலம்புவீர்களா?

இப்படி புலம்புபவர்கள் சாதாரண நிலையில் இருப்பவர்கள்தான். இவர்கள் பணம் போனால் வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று நினைப்பவர்கள். அவர்கள் நம்பிக்கை வைத்தது பணத்தின் மீதுதான்.

ஆனால் சில பேர் இந்த நிலமையை தெளிவாகப்புரிந்துகொள்வார்கள் அவர்கள் எதையுமே இழக்கவில்லை என்று. ஏனெனில் அவர்களுடைய பெரிய சொத்து சேர்த்து வைத்த பணமில்லை. அவர்களின் அறிவு, உழைப்பு, விடாமுயற்சி. அடிமட்டத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றாலும் ஆரம்பிக்கும் தைரியம். இவையெல்லாம் அவங்களை பணக்காரராகவே நிலைக்க வைக்கும்.

வெட்டப்பட்ட மரத்தில் இருந்து மறுப்படியும் துளிர்க்கும் செடிபோல பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டுமெனினும் தயங்காமல் ஆரம்பிக்கும் மன தைரியம் வேண்டும்.

இப்படி இருப்பவர்கள் எல்லோரும் தொடமுடியாத உயரத்தை கண்டிப்பாக தொடுவார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

அப்படியான மன தைரியத்தை கொண்டுள்ளவர்கள் எதையும் சாதகமாக எண்ணும் எண்ணம் உள்ளவர்கள். பணத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் திறமை மேல் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லோரும் சவால்களை வென்ற மனிதர்கள்தான் .

# யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரானார் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளார்

யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் மண்டைதீவு மண்ணின் மைந்தர் பேராசிரியர் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளார் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறையின் வாழ்நாள் பேராசிரியராக 29 செப்ரெம்பர் 2020 அன்று நியமிக்கப்பட்டுள்ளார் என்பது யாழ் மறைமாவட்டத்திற்கு மட்டுமல்ல, இலங்கைவாழ் தமிழ் மறைமாவட்டங்கள் அனைத்திற்குமே பெருமை தரும் விடயமாகும்.

இலங்கையில் தமிழ் கத்தோலிக்க குருக்களில் முதல் பேராசிரியரும் முதல் வாழ்நாள் பேராசிரியரும் இவரே என்பது மகிழ்வோடு இங்கு பதிவு செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

2009ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறையின் பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர் தொடர்ந்து 10 ஆண்டுகள் அதே துறையில் பணியாற்றி இலங்கை பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்தமையால் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறையின் வாழ்நாள் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு பல்கலைக்கழக பேராசிரியர் பதவி என்பது பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழுவின் சார்பில் இரண்டு பிரதிநிதிகள் அடங்கிய குழுவினால் வழங்கப்படும் ஒரு நியமனமாகும். இந்த பேராசிரியர் பதவியைப் பெற பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் பல நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், மகாநாட்டுக் கட்டுரைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச விரிவுரைகள், நூல் வெளியீடுகள், கற்பிக்கும் பாடம் மற்றும் கற்பிக்கும் துறைசார் முன்னேற்றத்திற்கான இதர பணிகள் என இவை அமையும். இவற்றை நிறைவு செய்யும் ஒருவர்தான் கற்பிக்கும் பல்கலைக்கழகத்தால் அதற்கான புள்ளிகள் வழங்கப்பட்டு அவரின் தகமைகள் ஆய்வு செய்யப்பட்டு பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவிற்கு பேராசிரியர் நிலைக்கு இவர் தகுதியானவர் எனச் சிபாரிசு செய்யும். இதன் பின்னர் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு அவரைப் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தி அவரைப் பேராசிரியர் என அறிவிக்கும்.

ஒரு பேராசிரியர் தன் பல்கலைக்கழக கற்பித்தற் பணியைநிறைவுசெய்யும்போது மற்றப்பணிகளைப்போல் இவரின் பணியும் நிறைவாகும். அதன் பின்னர் அவர் பேராசிரியர் என அழைக்கப்படமாட்டார். ஓய்வு நிலைப் பேராசிரியர் என அழைக்கப்படலாம். ஒரு பேராசிரியர் தனது பேராசிரியர் அறிவிப்பின் பின்னர் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் அதே பல்கலைக்கழகத்தில் பணியாற்றினால் மட்டுமே வாழ்நாள் பேராசிரியராக அறிவிக்கப்படுவார். ஒருவர் பேராசிரியராக அறிவிக்கப்பட்ட பின்னரும் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் அதே பல்கலைக்கழகத்தில் பணியாற்றாமல் பணியை என்ன காரணத்திற்காக விட்டு விலகினாலும் அல்லது தொடர் தகமைகளை நிறைவேற்றாமல் விட்டாலும் வாழ்நாள் பேராசிரியராக அறிவிக்கப்படமாட்டார். வாழ்நாள் பேராசிரியராக அறிவிக்கப்படும் ஒருவர் தனது துறைசார் பாடத்தில் என்றும் வாழ்நாள் பேராசிரியர் என அழைக்கப்படுவார். அவருக்குத் தனியான மதிப்பு அவரது பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும். அவருக்கு தனியான இடம் ஒதுக்கப்படும். என்றும் அவர் தன் பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றலாம். தனது பல்கலைக்கமகப் பெயரை இணைத்து வாழ்நாள் பேராசிரியர் என என்றும் பாவிக்கலாம். உதாரணமாக யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளார் எனப் பாவிக்கலாம்.



2005 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்ற இவர் 1990 – 1992 ஆண்டு காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். 1976 – 1980 காலப்பகுதியில் உரோமை உர்பாணியா பல்கலைக் கழகத்தில் இறையியல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர் 1972 – 1975 காலப்பகுதியில் இந்தியா திருச்சி புனித சின்னப்பர் குருத்துவக்கல்லூரியில் மெய்யியற் கல்வியைக் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறையின் தலைவராக 2004ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை 13 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றியுள்ள இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் 25 ஆண்டுகள் மொத்தமாகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2009ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை பேராசிரியராகப் பணியாற்றியுள்ள இவர் 2004 முதல் 2009 வரை சிரேஷ்ட விரிவுரையாளர் – தரம் ஒன்று, 1998 முதல் 2004 வரை சிரேஷ்ட விரிவுரையாளர் – தரம் இரண்டு, 1998இல் தற்காலிக உதவி விரிவுரையாளர், 1997 முதல் 1998 வரை தற்காலிக விரிவுரையாளர், 1990 முதல் 1997 வரை வருகைதரு விரிவுரையாளர் என யாழ் பல்கலைக்கழகக் கல்விப்பணிப் படிகளில் ஏறியவர்.

இவற்றைவிட யாழ் மறைமாவட்டத்தின் குருத்துவக்கல்லூரியான கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிரந்தர விரிவுரையாளராக 1990 இல் இருந்து 1998 வரையும், இதற்கு பின்னர் 1998இல் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தனது குருத்துவப்பணியின் பெரும் பகுதியில் கல்விப்பணி ஆற்றியுள்ள இவர் 1981ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை யாழ் மறைமாவட்டத்தின் ஆளுகையில் உள்ள யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றியுள்ளார். 1992 முதல் 1994 வரை புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபராகவும், 1981 முதல் 1983 வரை விடுதிப் பொறுப்பாளராகவும், 1981 முதல் 1982 வரை உதவி ஆசிரியர் மற்றும் பகுதித்தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இதே காலப்பகுதியில் யாழ் மறைமாவட்டத்தின் சிறிய குருமடமான புனித மாட்டினார் குருமடத்தின் அதிபராக 1983 முதல் 1988 வரையும், 1991 முதல் 1992 வரையும் பணியாற்றியுள்ளார். இந்தப் பணிகள் மத்தியில் இவர் பங்குத் தந்தையாகவும் பல பங்குகளிலும் பணியாற்றியுள்ளார். 2005 முதல் 2009 வரை பண்டியன்தாழ்வு புனித அன்னள் ஆலயத்தில் 5 ஆண்டுகளும், 1996 முதல் 1999 வரை யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் 3 ஆண்டுகளும், அதற்கு முன்னதாக 1980இல் ஓராண்டு கிளிநொச்சி உருத்திரபுரத்திலும் பணியாற்றியுள்ளார்.

07 தமிழ்ப் புத்தகங்களையும், 06 ஆங்கிலப் புத்தகங்களையும் ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். புனித யோசவ்வாஸ் இறையியலகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர் புனித யோசவ்வாஸ் புனிதர் பட்டக் குழுவிலும் பணியாற்றியவர்.

மண்டைதீவில் ஆரம்பக் கல்வியை (1961 – 1965) ஆரம்பித்த இவர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் (1966 – 1971) பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தார். பேராசிரியர் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளார் 14 குருக்களையும் 16 கன்னியர்களையும் திருச்சபைக்கு அர்ப்பணித்த விசுவாசத்தின் விளைநிலங்களில் ஒன்றான மண்டைதீவு மண்ணின் மைந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

2020ஆம் ஆண்டு குருத்துவப் பணியில் 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் திருவுளப்பணியோர் சபையின் மாகாண முதல்வர் ஏ.லொயிட் சாந்திக்குமார் அடிகளார், செபமாலைத் தாசர் சபையின் ஏ.ஸ்ரிபன் அடிகளார், அமல மரித் தியாகிகள் சபையின் போல் நட்சேத்திரம் அடிகளார் ஆகியோருடன் யாழ். மறைமாவட்ட மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாருடன் பேராசிரியர் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் அடிகளாரின் தொடர் வாழ்வும் பணியும் சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்.

**அருள்திரு கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை**
**(ஊடக வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)**

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

# உலகில் கொரோனாத் தொற்று நோய் அகன்று போக ஒக்ரோபர் 24 செபநாள்

## வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு

யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் அடங்கிய வடக்கு, கிழக்கு ஆயர் மன்றமானது உலகில் கொறோனா தொற்று நோய் அகன்று போக மரியன்னையின் செபமாலை மாதமாகிய ஒக்ரோபர் 24ஆம் திகதியை செபநாளாக அனுஷ்டிக்க அழைப்பு விடுத்துள்ளது.

அன்றைய தினம் இந்த நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் எல்லா ஆலயங்களிலும் காலைத் திருப்பலி , நாள் முழுவதும் செபமாலைத் தியானம், மாலை நற்கருணை ஆசீர் என்பவற்றின் வழி உலகில் கொறோனா தொற்று நோய் அகன்று போக செபிக்க வடக்கு, கிழக்கு ஆயர் மன்றம் வேண்டியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

யாழில் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் முதல் தடவையாக

# சுமந்திரன் பங்கேற்பு; அனந்தி வெளிநடப்பு



## கஜேந்திரகுமார் அணி புறக்கணிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.17

ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைக்கு எதி ராக ஜனநாயக ரீதியில் எதிர்ப்பை வெளி யிடும் முகமாக ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முதல் தடவையாகப் பங்கேற்றிருந்தார். எனினும், அவரது வருகையை அடுத்து ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் தலைவி அனந்தி சசிதரன் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்யும் வகையில் அங்கிருந்து வெளியேறினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் எவரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நினைவேந்தல் உரிமையை வலி யுறுத்தி கடந்த மாதம் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பின் பேரில் உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தால் போராட்டம் என்பன அனுஷ்டிக்கப்பட்டன. இந்தநிலையில் ராஜபக்ஷ அரசால் தொடர்ச்சியாகமேற்கொள்ளப்பட்டுவரும்அடக்குமுறைகளுக்கு எதிராக மேற் கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் முகமாக இன்று ஒன்றி ணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் யாழ்ப் பாணம் இளங் கலைஞர் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கொள்கை பரப்புச் செயலாளர் கந்தையா அருந்தவபாலன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.சிறிகாந்தா மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கட்சிகளின் கூட்டைக் கட்ட மைப்பு ரீதியாகப் பலப்படுத்துவது குறித்து ஆராய்வதற்கு ஏழு பேர் கொண்ட ஒரு குழுவை நியமிப்பதற்கு இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மூவர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியிலிருந்து மூவர் மற்றும் ஐங்கரநேசனின் தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் சார்பில் ஒருவர் என ஏழு பேர் இக்குழுவில் இடம்பெறுவர் என முடிவு செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த ஏழு பேரின் விவரங்களையும் பின்னர் சமர்ப்பிக்கும் என்றும் கூறப்பட்டது.

# கோப்பாய் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.17

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். இதில் கருணாரட்ணம் கருனானந்தன் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில்மேலும் தெரியவருவதாவது:–

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் சந்தியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கி ளில் பயணித்தவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் குறித்த குடும்பஸ்தர் உயர்ந்துள்ளார்.

உயிரிழந்தவரின்சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மைக் பொம்பியோவின் வருகை முடிவு இல்லை



அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் இன்னமும் உறுதியாகவில்லை என அமெரிக்கத் தூதரகத்தை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தை இராஜாங்க செயலாளரின் பயணம் தொடர்பாக வினவியவேளை மைக் பொம்பி யோவின் பயணம் குறித்து இன்னமும் உத்தியோகபூர்வமாக எதுவும் உறுதி செய்யப்படவில்லை என அமெரிக்க தூதரகம் தெரிவித்தது என ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞர் மண்மேடு இடிந்து விழுந்ததில் சாவு!



## மட்டு. கரடியனாறு கித்துள் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு– கரடியனாறு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கித்துள் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மண்மேடு இடிந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கரடியனாறு, இலுப்பட்டிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ராஜசுந்தரம் சஜிந்தன் (20 வயது) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கித்துள் பகுதியில் உள்ள முந்தனையாறு பகுதியில் தொடர்ச்சியான மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேற்படி ஆற்றுப்பகுதியின் ஓரத்தில் சுரங்கம் அகழ்ந்து மண் எடுத் துக்கொண்டிருக்கும் போது குறித்தமண்மேடு இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் அண்மைக்காலமாக மண் அகழ்வு களினால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுவரும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சட்டவிரோத மண் அகழ்வுகளினால் அதிகளவான உயிர்கள் பறிபோகும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கித்துள் முந்தனையாறு பகுதியில் தொடர்ச்சியான சட்டவிரோத மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருவது தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டன.

முந்தானையாற்றுப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகள் காரணமாக இது வரை இரண்டு உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இளைஞர்களுக்கு பண ஆசை காட்டி, அழைத்துச் செல்லப்பட்டு இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வுகளுக்கு பயன்படுத்தப்படுகிறார்கள் எனவும் அப்பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருசில அனுமதிப்பத்திரங்களை வைத்துக்கொண்டு பல நூறுக்கணக்கான அனுமதிப் பத்திரங்கள் பயன்படுத்துவது போன்று மண் கொள்ளைகள் நடைபெற்றுவருகின்றன எனவும் இதனை அதிகாரிகள் கண்டும் காணாததுபோன்று செயற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிகாலை 05மணி தொடக்கம் இரவு 10.00மணி வரையில் குறித்த பகுதியில் மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்படுவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முந்தனையாறு பகுதியில் தொடர்ச்சியான சட்டவிரோத மண் அகழ்வுகள் காரணமாக ஆற்றுப்பகுதி மோசமாக பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# சிறுவர் காப்பகத்திலிருந்து தப்பிய 5 சிறுவர்கள் மீட்பு!

## காப்பக உதவியாளர் கைது

சிறுவர் காப்பகத்தின் ஐந்து சிறுவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இதற்கு உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளர் பண்டாரவளைப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். பண்டாரவளை சிறுவர் காப்பகத்திலேயே, நேற்று இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பெற்றோரினால் கைவிடப்பட்ட மற்றும் நீதிமன்ற உத்தரவிற்கமைய இக்காப்பகத்தில் தடுத்துவைக்கப்பட்ட சிறுவர்களில் ஐவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் பண்டாரவளை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சந்தன ஜயதிலக்க தலைமை யிலான குழுவினர் விரைந்து, சிறுவர்களை மீட்டமையுடன், இச் சிறுவர்கள் தப்பிச் செல்ல உதவிய காப்பக உதவிப் பொறுப்பாளரும் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட காப்பக உதவிப் பொறுப்பாளர் தற்போது விசார ணைக்குற்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகள் நிறைவுற்றதும், காப்பக உதவிப் பொறுப்பாளர் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்று, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன ஜயதிலக்க தெரிவித்தார்.

# இயக்கச்சியில் சிப்பாய் ஒருவர் சுட்டுத் தற்கொலை

கிளிநொச்சி – இயக்கச்சி படை முகாமிலுள்ள இராணுவச் சிப்பாய் ஒருவர் இன்று சனிக்கிழமை அதிகாலை தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

காதல் தோல்வியே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் இரட்டைக் கொலை ஒருவர் காயம்; ஒருவர் கைதானார்!

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாணிக்கர் வளவுப்பகுதியில் வீடொன்றில் இருந்து இருவரின் சடலங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு சடலங்கள் இருக்கின்றன எனப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு சென்ற ஓமந்தை பொலிஸார், தலை யில் பாரிய வெட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இரண்டு சடலங்களைக் கண்டெடுத்துள்ளனர்.

மேலும் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரது நிலையும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் மாணிக்கர் வளவு கிராமத்தின் கிராம அபிவிருத்திசங்கத்தலைவரான கோபால் குகதாசன் – வயது 40 (4 பிள்ளைகளின் தந்தை) மற்றும் கரிப்பட்டமுறிப்பை சேர்ந்த சிவனு மகேந்திரன் (வயது 34) ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸாரால் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

சுப்பிரமணியம் சிவாகரன் என்ற நபர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் மாணிக்கர் வளவில் வசித்துவரும் இளைஞர் ஒருவர் ஓமந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருக்கும், மரணமடைந் தவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கொலையில் முடிந் துள்ளது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 3164 796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1984.03.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -கேட்டை (2)
கி.பா - 27 செவ் - 10 இல்
தகைமை - B.S.C தொழில் - Network Emgineer Singabour
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் சிங்கப்பூர் + இலங்கையில் தேவை.

பிறந்த திகதி - 1980.12.19 மதம் - இந்து
ஜாதி - V சைவம் நட்சத்திரம் - பரணி (4)
கி.பா - 6 செவ்/ சூரி - 3 இல்
தகைமை - M.S.C + Computer தொழில் - Company Colombo.
எதிர்பார்ப்பு - கொழும்பில் வேலை சைவ மணமகள்.

பிறந்த திகதி -1986.03.31 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 58 செவ் - 6 இல்
தகைமை - B.S.C
தொழில் - Assitant Engineer (அரச சேவை)
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 21 செவ் - 8 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - பட்டதாரி, Doctor, Engineer மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1988.10.02 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் (4)
கி.பா -40 செவ் - 5 இல்
தகைமை - AERO special தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - விஞ்ஞான பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி - 1989.10.05 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 11 செவ்/ சூரி - 2 இல்
தகைமை - B.E. Emgineer தொழில் - Network Engineer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை, தனியார் கொழும்பு மணமகன்.

பிறந்த திகதி - 1985.08.02 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவுட்டம் (4)
கி.பா - 55 செவ்/சூரி - 7 இல்
தகைமை - B.A (174cm) தொழில் - Management Assitant
எதிர்பார்ப்பு - அரச சேவை யாழில் வேலை செய்யும் மணமகள்.

பிறந்த திகதி - 1991.10.13 மதம் - இந்து
ஜாதி - செங்குந்தர் நட்சத்திரம் - கேட்டை (4)
கி.பா - 18 செவ் - 11 இல்
தகைமை -Quantity Surveyor தொழில் - Surveyor Assitant
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1992.10.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி 5'2"
கி.பா - 18 செவ் - 18 இல்
தகைமை - Bissness manangement.
தொழில் - Bank officer Colombo.
எதிர்பார்ப்பு - உயர் பதவி கொம்பில் வேலை செய்யும் மணமகன்.

பிறந்த திகதி - 1994.04.09 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி (2)
கி.பா - 72 செவ்/ சூரி - 8 இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - (G.S) அரச தொழில்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் -காரைநகர் முதலிடம்.

பிறந்த திகதி - 1992.10.22 மதம் - இந்து
ஜாதி - சைவ வேளாளர் நட்சத்திரம் - பூரம் (1) 5'2"
கி.பா - 23 செவ் - 7 இல்
தகைமை - கல்வியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை சைவ மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1986.08.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை (2)
கி.பா - 75 செவ் - 8 இல் 5'4"
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Engineer, Accoutant மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.12.10 மதம் - இந்து
ஜாதி - V சைவம் நட்சத்திரம் - பரணி (3) 5'3"
கி.பா - 35 செவ் - 10 இல்
தகைமை -கல்வியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - சைவ மணமகன் 1984 பின்பு.

பிறந்த திகதி - 1989.10.21 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - புனர்பூசம் (4)
கி.பா - 17 செவ் - 05 இல்
தகைமை - B.S.C விரிவுரையாளர்
தொழில் - canada (scholarship)
எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாடு வெளிநாடு மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.11.28 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி (4)
கி.பா - 31 5'5" செவ் - 07 இல்
தகைமை - B.S.C
தொழில் - Management Assitant
எதிர்பார்ப்பு - Doctor, Engineer மணமகன் தேவை.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000



# சொர்க்கம் திருமண சேவை

### மணமகன் விபரம்

பிறந்த திகதி - 1991.03.03 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அஸ்தம்
கி.பா - .. செவ் -8 இல்
தகைமை - BBA தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணப்பெண்.

பிறந்த திகதி - 1988.12.14 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - சதயம்
கி.பா - .. செவ் - ...
தகைமை - BA தொழில் -Development Officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணப்பெண்

பிறந்த திகதி - 1984.08.21 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - .... செவ் - 2 இல்
தகைமை - HND Diploma தொழில் - P.T. Cough Goverment
எதிர்பார்ப்பு - குடும்பப் பிண்ணனியுடைய மணப்பெண்.

பிறந்த திகதி - 1988.06.07 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - பூரட்டாதி 3ம் பாதம்
கி.பா - 14 செவ் - 8 இல்
தகைமை - A/L தொழில் - Compownder Goverment
எதிர்பார்ப்பு - குடும்பப் பிண்ணனியுடைய மணப்பெண்.

பிறந்த திகதி - 1991.12.30 மதம் - இந்து
ஜாதி - N பகுதி நட்சத்திரம் - சுவாதி
கி.பா - ... செவ் - ...
தகைமை - BA தொழில் - Development officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணப்பெண்

பிறந்த திகதி - 1994 மதம் - இந்து
ஜாதி - N பகுதி நட்சத்திரம் - பூசம்
கி.பா - .... செவ் - 4 இல்
தகைமை - A/L தொழில் - Technology Lap Assitant
எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணப்பெண்.

### மணமகள் விபரம்

பிறந்த திகதி - 1994.03.05 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - .. செவ்/ சூரி - 2 இல்
தகைமை - Diploma Medical Administration
தொழில் - Security Tream Leader (canada)
எதிர்பார்ப்பு - படித்த இலங்கையில் உள்ள மணமகன் (சூரி/செவ்)

பிறந்த திகதி - 1989.07.06 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - ஆயிலியம்
தகைமை - Bsc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணமகன்.

பிறந்த திகதி - 1991.05.24 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அஸ்தம் 12ல் செவ்வாய்
தகைமை - MBA தொழில் - Engineer
எதிர்பார்ப்பு -அரச உத்தியோக மணமகன்.

பிறந்த திகதி - 1987.07.16 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - சதயம்
கி.பா - ...... செவ்/ சூரி - 2இல்
தகைமை - BA தொழில் - அரச துறை
எதிர்பார்ப்பு - அரச துறையில் பணிபுரியும் மணமகன்.

பிறந்த திகதி - 1995.03.21 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - விசாகம் 4ம் பாதம்
கி.பா - .. செவ் - 2 இல்
தகைமை - BA தொழில் - Teacher
எதிர்பார்ப்பு - அரச தொழில் மணமகன்.

பிறந்த திகதி - 1998.10.15 மதம் - இந்து
ஜாதி - தேவர் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - ...... செவ் - லக்கின செவ்வாய்
தகைமை - ... தொழில் - Private Office work
எதிர்பார்ப்பு - அரச துறையில் பணிபுரியும் மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
www.sorkham.com
தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515


# 20இற்கு எதிராக நடந்த போராட்டத்துக்குத் தடை






அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்த்து இலங்கையின் சிரேஷ்ட தொழிற்சங்க தலைவர்கள் முன்னெடுத்த போராட்டத்தை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மக்களின் இறையாண்மையை ஒழிப்பதற்கும், ஒரு சர்வாதிகார நிர்வாகியை உருவாக்குவதற்கும் எதிராக சமூகத்தை தெளிவுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிஸார் தடுத்துள்ளனர் என 20இற்கு எதிரான தொழிற்சங்க இயக்கம் தெரிவித்துள்ளது.

20இற்கு எதிரான போராட்டத்தின் ஒரு கட்டமாக, தொழிற்சங்கத் தலைவர்கள் நேற்று முன்தினம் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்புச் சுவரொட்டியை ஒட்ட முனைந்தனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள் சமூக இடைவெளி மற்றும் பிற தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை கடைப்பிடித்து ஒன்றிணைந்த போதிலும், பொலிஸார் அவர்களைத் தடுத்தனர் என, 20ஆவது திருத்தத்திற்கு எதிரான தொழிற்சங்க இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் ஜனநாயகத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக அமைந்துள்ள 20ஆவது திருத்தத்தை தொழிற்சங்க இயக்கம் கண்டிக்கிறது.

தொழிற்சங்கங்கள் அமைதியாக எதிர்ப்பினை வெளியிடுகின்ற நிலையில், கொரோனா சட்டங்களை காரணம் காட்டி பொலிஸார் இதனை தடுப்பதன் ஊடான தனிநபரின் எதிர்ப்பு உரிமைக்கு பொலிஸார் தடை விதிப்பதாக அமைந்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களின் போர்வையில் 20ஆவது திருத்தத்திற்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்களைத் தடுக்க பொலிஸாரை பயன்படுத்துவது, 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வெளிப்படும் சர்வாதிகார அரச பண்புகளுக்கான முன்னோடி செயற்பாடாகவே பார்க்க முடிகிறது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களின் போர்வையில் இறந்தவர்களை நினைவுகூரும் சுதந்திரத்தை வடக்கில் உள்ள தமிழர்களிடமிருந்து பறிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை எதிர்த்து வடக்கில் உள்ள தமிழ் முஸ்லிம்கள் சமீபத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் பாரிய கடையடைப்பு போராட்டங்களை முன்னெடுத்தனர். - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வணிக, தொழில்துறை மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சில்வெஸ்டர் ஜயகொடி, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் லீனஸ் ஜயதிலக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஜோசப் ஸ்டார்லின், இலங்கை பொது முகாமைத்துவ அலுவலர்கள் சங்கத்தின் உதேனி திசாநாயக்க, அஞ்சல் ஐக்கிய தொழிற்சங்க கூட்டணியின் சிந்தக பண்டார, சுகாதார நிபுணர்களின் சங்கத்தின் ரவி குமுதேஷ், இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் சமிந்த பெரேரா ஆகியோர் 20இற்கு எதிரான தொழிற்சங்க இயக்கம் சார்பாக ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

# 20 தற்கொலையளிகளை ஏவும் திட்டம் இருந்ததாம்

தற்கொலை குண்டுதாரிகள் 20 பேரை பயன்படுத்தி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை மேற்கொள்ள சஹ்ரான் ஹசீம் திட்டமிட்டிருந்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முதலாவது தாக்குதலின் பின்னர் மூன்று கட்டங்களாகத் தாக்குதல்கள் நடத்துவதற்கு அவர் திட்டமிட்டிருந்ததார் என்பது கைது செய்யப்பட்ட சஹ்ரானின் குழு உறுப்பினரிடம் மேற்கொண்ட விசாரணைகள் ஊடாக தெரிய வந்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கும் போது தீவிரவாத ஒழிப்பு பிரிவின் அதிகாரி ஒருவர் இதனை தெரிவித்துள்ளார்.

# புதுக்குடியிருப்பில் இருந்து வவுனியா சென்ற இளைஞரைக் காணவில்லை!



புதுக்குடியிருப்பில் இருந்து வவுனியா சென்ற இளைஞரைக் காணவில்லை என்று இளைஞரின் பெற்றோரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவு பகுதியைச் சேர்ந்த மனுவேப்பிள்ளை மன்னா (ஜயாச்சி) என்ற 35 வயது இளைஞர் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் வவுனியா நோக்கிச் சென்ற பஸ்ஸில் ஏறி பயணித்துள்ளார்.

குறித்த பஸ்ஸில் இருந்து மாலை 4.30 மணியளவில் வவுனியா, தபாலகம் முன்பாக இறங்கியுள்ளார். அதன்பின்னர் குறித்த இளைஞர் தொடர்பான எந்தத் தகவலும் இல்லை. அவரைக் காணவில்லை எனப் பெற்றோர் மற்றும் உறவினர்கள் புதுக்குடியிருப்புப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், வவுனியாப் பொலிஸாருக்கும் தெரியப் படுத்தியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த இளைஞரைக் கண்டவர்கள் 076212738 அல்லது 077629797 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறும் உறவினர்கள் கோரியுள்ளனர். (100)

## மணமகள் தேவை

1985, யாழிந்து விஸ்வகுலம், பூரம், Doctor, காரைநகரை சேர்ந்த கொழும்பில் வதியும் மணமகன் (பதிவு இலக்கம்: 3823). விபரங்களுக்கு இணையவழி திருமண சேவை www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). காலவரையறையின்றி, இடைத்தரகரின்றி மணமக்களுடன் இணையத்தளத்தினூடாக தொடர்புகொள்ளுங்கள். திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக்கழிவு. அழையுங்கள் 076 664 9401.

## மணமகன் தேவை

1986, யாழிந்து வேளாளர், கார்த்திகை, Doctor, குரும்பசிட்டியை சேர்ந்த கொழும்பில் வதியும் மணமகள் (பதிவு இலக்கம்: 4243). விபரங்களுக்கு இணையவழி திருமண சேவை www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). இடைத்தரகரின்றி மணமக்களின் ஜாதகம், படம், தொலைபேசிஎண் பெற்றுக்கொள்ளுங்கள். திருமணம் சரிவரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை. பதிவுக்கு 50% விலைக்கழிவு. அழையுங்கள் 076 664 9401.

## மணமகன் தேவை

யாழிந்து வேளாளர் குல உயர் பதவிகளிலுள்ள அழகிய மனமகள்களுக்கு தகுந்த மணமகன் தேவை.

bridethava@gmail.com

HIKVISION Mega Store
ஹிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION
Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
இல - 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
hikvisionmegastore@gmail.com

லக்ஸ்மி திருமண சேவை
எம்மிடம் எல்லா சமூகத்தினருக்குமான ஜாதக குறிப்புகளும், உள்நாடு, வெளிநாடு மற்றும் அரச தனியார் ஊழியர்களுக்குமான குறிப்புகளும் உண்டு.
குறிப்பு:- *திருமண ஜாதக பதிவுகள் இலவசம்.
தொடர்பு:- 077 846 1976
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில், மேற்கு கோண்டாவில்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1985.10.28 | பிறந்த திகதி – 1988.05.29 |
| மதம் – Rc (குருகுலம் K.K) | மதம் – இந்து (K.K குருகுலம்) |
| தொழில் – UK PR | நட்சத்திரம் – சுவாதி |
| எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண் | பாவம் – 26 |
| | கல்வி – HMDA |
| | எதிர்பார்ப்பு – வெளிநாடு தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
5kg/10kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | ரூ.1500/ ரூ.1300 |
| ஜேர்மனி | ரூ.1500/ ரூ.1300 |
| டென்மார்க் | ரூ.1500/ ரூ.1300 |
| ஹொலன்ட் | ரூ.1500/ ரூ.1300 |
| பெல்ஜியம் | ரூ.1500/ ரூ.1300 |
| இத்தாலி | ரூ.1650/ ரூ.1400 |
| லண்டன் | ரூ.1600/ ரூ.1150 |

070 330 5500
075 330 5500
076 122 1566
மேலே உள்ள சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது. (வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
லண்டன்-1050/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/=
சுவிஸ்- 1350/= கனடா- 1450/= (வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
இந்தியா – டுபாய் – சைனா நாடுகளில் பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள (துணிப்பொருட்கள் தவிர)

northern PC PARK
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகரமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
10, Muddaskadai Junction Stanley Road, Jaffna
Northern Pc Park 077 757 0124 021 567 5566
NPcpark 077 336 6443 021 222 0551
northernpcpark 075 555 7327 021 222 2050
Northern PC Park 071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line - 077 777 1545

எந்த சூழ்நிலையிலும் மனதை தளரவிடாதீர்கள் உங்கள் துயரங்களை எம்மிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
“உங்களுக்காக நாம்”
கை கொடுக்கும் நண்பர்கள்
ஸ்ரீ லங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளை
Sri Lanka Sumithrayo Jaffna Branch
இலவச சேவை FREE SERVICE
077 900 8776
இல.175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜேர்மனி •டென்மார்க் •நெதர்லாந்து •இத்தாலி •சுவிஸ் 1150/= Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240

அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2022ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 076822624
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

BRENS FASHION PLANET Signature Reborn
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ரெடிமேட் ஆடைகள்
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமாக திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
075 527 9110
077 332 1937
021 2221 2777
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb. Brrens Fashion Planet
Email . brensfashionplanet@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2020 இல் வெளியிடப்பெற்றது.